## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## MCOP. No.267/2024

2025-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பர்ஜானா பாத்திமா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1, பிரேத கூராய்வு அறிக்கை ம.சா.ஆ.2, இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.3, வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.4, SK கன்ஸ்ட்ரக்சன் பணி சான்று அசல் ம.சா.ஆ.5, மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் ம.சா.ஆ.6 வரிசை (எண்ணம்-4), மோட்டார் வாகன காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.7, என்னுடைய தந்தையின் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனை வழங்கிய டிஸ்ஜார்ஜ் சம்மரி ம.சா.ஆ.8, தனலட்சுமி மருத்துவமனை மற்றும் திருச்சி காவேரி மருத்துவமனை எனது தந்தை சிகிச்சை பெற்றுவந்ததற்கான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.9 வரிசை (எண்ணம்-4), காவேரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் ம.சா.ஆ.10 வரிசை (எண்ணம்-9), எனது தந்தை திருச்சி காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவபில்கள் ம.சா.ஆ.11 வரிசை (எண்ணம்-14), எனது தந்தை திருச்சி காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் ம.சா.ஆ.12, திருச்சி காவேரி

மருத்துவமனையில் வழங்கப்பட்ட பில்கள் ம.சா.ஆ.13 வரிசை (எண்ணம்-19), திருச்சி காவேரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட பில்கள் ம.சா.ஆ.14 வரிசை (எண்ணம்-10), பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட பில்கள் ம.சா.ஆ.15 வரிசை (எண்ணம்-6), பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட பில்கள் ம.சா.ஆ.16 வரிசை (எண்ணம்-6), பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட Death Summary and Discharge summary ம.சா.ஆ.17, கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது மேல்சிகிச்சைக்காக எனது தந்தைக்கு வழங்கப்பட்ட மருத்துவசான்று ம.சா.ஆ.18 (மருத்துவபில்கள் 3ம் எதிர்மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. கேள்விபட்டேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் என்அப்பா இறந்தபின்னர் சமீபத்தில் திருமணம் ஆனது. 2, 3ம் மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர்கள் தனியாக இருக்கிறார்கள். இறந்துபோன என் தகப்பனாரை சார்ந்து அவர்கள் இல்லை என்றால் சரியல்ல. படிக்கட்டில் நின்று கொண்டிருக்கும்போது என் தகப்பனார் தான் தடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. படிக்கட்டில் நிற்க கூடாது என்று பேருந்தின் நடத்துனர் சொல்லியும் என் தகப்பனார் அதை கேட்கவில்லை என்றால் சரியல்ல. பேருந்தில் இடமிருந்தும் என்தகப்பனார் உட்காரமால் படிக்கட்டில் பயணம் செய்து அவருடைய கவனக்குறைவால் கீழே விழந்ததால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. பின்படிக்கட்டு வழியாக என்தகப்பனார் விழுந்ததாக கேள்விபட்டேன். வழக்கிற்காக என்அப்பா கன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தில் பணிபுரிந்ததாகவும், வருமானம் ஈட்டு வந்ததாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதிக நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்காக என்தகப்பனாரின் வயது மற்றும் வருமானத்தை அதிகபடுத்தி கூறுகிறேன்

என்றால் சரியல்ல. மருந்துவரின் பரிந்துரைகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவபில்கள் சம்மந்தமாக சம்மந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரிகளை விசாரித்தால் தான் உண்மை நிலவரம் தெரியும் என்றால் சரியல்ல. அடிப்பட்டு 6 நாட்கள் கழித்து என் அப்பா இறந்தார். வழக்கிற்காக மருத்துவ பில்கள் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்அப்பா இறக்கும் காலத்தில் நான், என்அம்மா மற்றும் என்அப்பா சேர்ந்திருந்தோம். அண்ணன் குடும்பமும் எங்களுடன் இருந்தது. குடும்ப அட்டையில் என்அண்ணன் பெயரும் உள்ளது. சாட்சி தன் கைவமுள்ள குடும்ப அட்டை காண்பித்துள்ளார். அதில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 4 என்று உள்ளது. தற்போது என் அண்ணன் பெங்களூரில் வேலை செய்கிறார். பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமாக நஷ்டஈடு கோரியுள்ளோம் என்றும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**:

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.